gistered as a News paper in Ceylon
P. M. G. NO. H. A
59/300 of 1939.

உ
சிவமயம்

# இந்துசாதனம்

விரோதி வருஷம்
(1889)
ஆவணிமாதம்
28-ந்உ ஆரம்பமானது

செவ்வாய் வெள்ளிதோறும் வெளிவருவது

மாசில் வீணையும் மாலை மதியமும், வீசுதென்றலும் வீங்கிளவேனிலும், மூசுவண்டறை பொய்கையும் போன்றதே, ஈசனெந்தை யிணையடி நீழலே.

புத். ருஅ] யாழ்ப்பாணம்—விய஌ ஆனிமீ உஅஉ ( 1946 ஜுலை 12 வெள்ளிக்கிழமை ) [இல உஅ

# வேறோர் வற்றா நீர் நிலை

## பொக்கணை ஊற்றுப் பரிசோதனை ஆரம்பம்

## திரு. ஸ்ரீகாந்தா ஆரம்பித்துவைத்தார்

### பல கிராமங்களுக்கு நீர்ப்பாய்ச்சல் வசதி

(நமது நிருபர்)

இராப்பகலாக நெற்றி வியர்வை நிலத்திற் சிந்த, தனது வாழ்நாள் முழுவதையுமே இரத்தம் பிழிந்து உழைப்பதற்கு அர்ப்பணம் செய்து கொண்டிருக்கும் ஏழைக் கமக்காரரைப் பார்த்துக்கொண்டிருக்க இறைவனுக்குச் சகிக்கவில்லை. மலைகளில்லாத நம் நாட்டில் — ஆற்று வசதிகளில்லாத நம் நாட்டில் இறைவன் இயற்கை வசதிகளை ஏற்படுத்தியிருக்கிறான். நம்மவர் இவ்வளவு காலமும் இயற்கை வசதிகளைப் பயன்படுத்தாதது துர்அதிர்ஷ்டமே. கமக்காரரது நல்வினைப் பயனால் புத்தூரில் உள்ள நிலாவரைத்திட்டம் வெற்றியடைந்து கொண்டிருக்கிறது. இந் நிலாவரைத் திட்டம் இறைவன் கருணையால் கிடைக்கப்பெற்ற முதலாவது நீர்ப்பாய்ச்சல் திட்டமாகும். இரண்டாவது நீர்ப்பாய்ச்சல் திட்டம் ஊரெழுவில் உள்ள "பொக்கணை" என்ற நீர்நிலைமூலம் நீர்ப்பாய்ச்சுவதாகும். இப்பொக்கணைமூலம் நீர்ப்பாய்ச்சுவது பற்றிய பரிசோதனை 8-7-46 திங்கட்கிழமை நல்ல முகூர்த்தத்தில் ஆரம்பிக்கப்பட்டிருக்கிறது. இங்குள்ள இயந்திரம் ஒரு நிமிஷத்தில் 500 கலன் வெளியேற்றுகிறது. (1 மணித்தியாலத்தில் 30 ஆயிரம் கலன்.) குழாயின் விட்டம் ஆறு அங்குலம் பொக்கணை மூலம் நீர்ப்பாய்ச்சுமாறு பொதுமக்கள் பலமுறை நீர்ப்பாய்ச்சற் பகுதியாரை வற்புறுத்தியுள்ளனர். 8-7-46 பகல் 11-30 மணியளவில் அவசரகால உதவிமாகாண அதிபர் ஸ்ரீமான் M. ஸ்ரீகாந்தா அவர்களும் திரு. T முருகேசபிள்ளை D R O. அவர்களும் ஊரெழு, உரும்பராய், நீர்வேலி முதலிய கிராமத்தில் இருந்துவந்த பொதுமக்களால் மேளவாத்திய சகிதமாக ஊர்வலமாக அழைத்துச் செல்லப்பட்டார்கள். பொக்கணை என்ற நீர்நிலைக்குப் பக்கத்தில் மாவிலை முதலிய தோரணங்களால்அலங்கரிக்கப்பட்ட பந்தலுக்குப் போனவுடன் மாலையிட்டு வரவேற்கப்பட்டார்கள் சைவ முறைப்படி பூரண கும்பம், குத்துவிளக்கு முதலியன அலங்கரித்தன. தேவார பாராயணத்துடன் பொதுக்கூட்டம் ஆரம்பமானது. ஸ்ரீமான் M. ஸ்ரீகாந்தா அவர்கள் தலைமை வகித்தார்கள். நீர்வேலிக் கிராமச்சங்கத் தலைவர் ஸ்ரீமான் M. வேலாயுதர் அவர்கள் எல்லோரையும் வரவேற்றுப் பேசி, தலைவர் அவர்களை நீர்ப்பாய்ச்சுதலை ஆரம்பித்து வைக்கும்படி பொதுமக்கள் சார்பாக வேண்டிக்கொண்டார். தலைவர் அவர்கள் கூறியதாவது:— "இப் பொக்கணை பல வருடங்களுக்கு முன் இறைத்துப் பார்க்கப்பட்டதென அறிகிறேன். அப்பொழுது வற்றவில்லை. இதன்மூலம் நீர்ப்பாய்ச்ச ஆரம்பிக்க வேண்டுமென்று இங்குள்ள அதிகாரிபலமுறை வற்புறுத்தியுள்ளார். இது கடவுளால் எங்களுக்குக் கொடுக்கப்பட்டவரப்பிரசாதமாகும். மக்கள் ஒவ்வொருவரும் புதிய முயற்சி ஆரம்பிக்கும்போது வெற்றியடையவேண்டும் என்று கடவுளைப் பிரார்த்திப்பது சகஜம், அதற்காகச் சைவ மக்களாகிய நாங்கள் நமது கௌரவத்தை விட்டுக் கொடுக்கக்கூடாது இது சிலருக்குப் பிடிக்காதிருக்கலாம். நாங்கள் எமது வழக்கப்படி கடவுளைப் பிரார்த்தித்து இப் புது முயற்சியை ஆரம்பிப்போமாக. வெற்றி தோல்வி கடவுளின் கிருபையைப் பொறுத்தது. நீங்கள் எல்லோரும் இத்திட்டம் வெற்றியடையவேண்டும் என்று கடவுளைப் பிரார்த்தனை செய்யுங்கள்." அதன் பின்னர் கற்பூரம் கொழுத்தி முழுமுதற் கடவுளை வேண்டுதல் செய்து ஸ்ரீமான் ஸ்ரீகந்தா அவர்கள் தேங்காய் உடைத்து யந்திரத்தை இயக்கி ஆரம்பித்து வைத்தார். அப்பொழுது கமக்காரர் பலர் தேவாரம் முதலிய தோத்திரங்களை ஓதினர். அதிகநேரமாக இறைத்தும் சிறிதேனும் நீர் வற்றவில்லை. இது கமக்காரர்கள் எல்லோருக்கும் மகிழ்ச்சியைக் கொடுக்கிறது. இப்பொக்கணைமூலம் ஊரெழு உரும்பராய், சுன்னாகம் முதலிய கிராமங்களில் உள்ள நிலங்களுக்கு நீர் பாய்ச்சலாம். இறைக்கப்பட்ட நீர் மிகவும் நல்ல நீர் மாரிகாலத்தில் கோடாகோடி கலன் மழைநீர் இப்பொக்கணைக்குள் செல்கிறது. பொக்கணை எவ்வளவு நீரையும் கொள்ளத் தயார். எவ்வளவு நீரையும் கொடுக்கத் தயார். பொக்கணை யென்பது "இராமபிரான்" வில் ஊன்றி நீர் அருந்திய இடம் என்று பொதுமக்கள் கூறிவருகிறார்கள். பொக்கணையைச் சுற்றி முழுவதும் கற்பாராக இருக்கிறது. இத்தீர்த்தத்தில் அந்தியேட்டி முதலிய ஈமக்கிரியைகள் (கீரிமலை போல்) செய்வதுமுண்டு. பக்கத்தில் சுடுகாடுகள் உண்டு. இறைக்கும் நீர் வாழை, தினை, கத்தரி முதலிய பயிர்களுக்கு நீர்ப்பாய்ச்சப்படுகிறது.

---

## புடைவைக் கூப்பன்கள்

இந்த 11-7-46 தொடக்கம் இப்போது நடைமுறையில் உள்ள புடைவைக் கூப்பன் புத்தகத்தில் உள்ள பின்வரும் இலக்கப் புள்ளிகள் உபயோகிக்கப்படலாம் என்று அறிவிக்கப்படுகிறது.

வளர்ந்தவர்களின் (ஸீனியர்) புத்தகங்களில் ஒரு புள்ளியைக் கொண்ட S—1, S—4 ஆகிய இலக்கங்களும் 2 அரைப்புள்ளிகள் கொண்ட 23ம் இலக்கமும்.

பிள்ளைகள் (ஜுனியர்) புத்தகங்களில் ஒரு புள்ளியைக் கொண்ட J—11 என்ற இலக்கமும், 2 அரைப் புள்ளிகள் கொண்ட 22ம் இலக்கமும்.

# இலங்கை இந்தியர்

## சென்னை அரசாங்கத்தின் கவலை

இலங்கையில் வசிக்கும் இந்தியர்நிலைமை பற்றி சென்னைக் காங்கிரஸ் அரசாங்கம் மிகுந்த கவலைப்படுவதாகத் தெரிகிறது. இவ்விஷயமாகச் சென்னை அரசினர் மத்திய இந்திய அரசாங்கத்துக்குக் கண்டிப்பான ஓர் கடிதம் எழுதியிருக்கின்றனர். இலங்கையில் வாழும் இந்தியரின் நிலைமை நாளுக்குநாள் மோசமாகி வருகிறது ஆனமையினால், இந்தப் பிரச்சினையை உடனே தீர்க்கவேண்டியது அவசியம். இதன் பொருட்டு ஓர் முக்கூட்டு மகாநாட்டைக் கூட்டுதல் பொருத்தமுடைத்தாகும் என்று சென்னை அரசாங்கம் கேட்டிருக்கிறது.

இலங்கை இந்தியக் காங்கிரசின் தலைவர்களில் ஒருவராய மிஸ்ரர் A. அஸீஸ் சென்னையில் உள்ள மந்திரிகளையும் காங்கிரஸ் தலைவர்களையும் கண்டு இலங்கை வாழ் இந்தியர் நிலைமையை விளக்கிவிட்டு டெல்கியில் மத்திய அரசாங்க அதிகாரிகளையும் சந்தித்து இந்த விஷயமாக விளக்கி யிருக்கிறார்.

மௌலானா அபுல்கலாம் அசாத், பண்டிதர் நேரு உட்படக் காங்கிரஸ் தலைவர்கள் பலரையும் மிஸ்ரர் அசிஸ் கண்டு இலங்கை இந்தியர் நிலைமையைத் தெள்ளிதில் விளக்கி யுள்ளார் இதன் பயனாக இந்தியத் தலைவர்கள் இவ்விஷயத்திற் பெரும் மனக்கிளர்ச்சி யடைந்திருக்கின்றனர் என்று ஓர் செய்தி கூறுகிறது.

# வர்த்தகத் திறமை!

## அரசாங்கத்தின் கொத்தமல்லி

நமது இலங்கை அரசாங்கம் செய்யும் கொத்தமல்லி வியாபாரத்தினால் ஆயிரக் கணக்கான ரூபாய்கள் நட்டம் ஏற்படும் போலத் தெரிகிறது. 7, 8 மாதங்களுக்குப் போதிய இருப்பு அரசாங்கத்தாரிடம் இருக்கிறது ஆனால் அது இரண்டு மாதத்துக்கு மேல் இருந்தால் பழுது அடைந்து விடும் என அதிகாரிகள் அஞ்சுகின்றனர்.

அரசாங்கம் இப்போது அந்தர் ஒன்று 35 ரூபாவாக மல்லியைவிற்கிறது. ஆனால் கொழும்பில் உள்ள வியாபாரிமார் அந்தர் ஒன்று 2 ரூபாவாக விற்கின்றனர். எனவே, அரசாங்கத்திடம கூடிய விலை கொடுத்து இதனை வாங்க ஜனங்கள் பின்னிற்கின்றனர்.

இப்படியாக மிதமிஞ்சியுள்ள கொத்தமல்லியை என்ன செய்யலாம் என்பது பற்றி அரசினர் யோசித்து வருகின்றனர்.

# இந்தப் பிரசாரம் ஏன்?

## தொழிலாளர்மீது எதிர்பாராத அநுதாபம்!

## வாழ்க்கைநிலையைஉயர்த்துதல்நோக்கமாம்

### ரேடியோ மூலம் அபாரப் பிரசாரம்

இலங்கை அரசாங்கம் தொழிலாளர்மீது மிகுந்த கருணையுள்ளது அப்படிப்பட்ட இந்த அரசாங்கத்துடன் தொழிலாளர்களாயுள்ளோர் ஒத்துழைக்கவேண்டும் என்று மிஸ்ரர் சேனநாயக்காவை முதல்வராகக் கொண்டிருக்கும் நமது அரசாங்கம் ரேடியோ மூலமாயும், பெரிய சுவரொட்டி விளம்பரங்கள் மூலமாகவும் ஓர் பிரசாரம் இப்போது செய்துவருகிறது.

பத்திரிகைத் தொழிலில் ஈடுபட்டுள்ள சுரேந்திரா என்னும் ஒருவர் ரேடியோமூலம் இப்போது இந்தப் பிரசாரத்தைச் செய்து வருகிறார். "தொழிலாளர்களே, உங்களுக்குஇன்னும் உயர்ந்த வேதனம் அளிக்கவே இலங்கை அரசாங்கம் தீர்மானித்திருக்கிறது. உங்கள் வாழ்க்கைநிலையை உயர்த்துவதற்கு அரசாங்கம் கங்கணம் கட்டி நிற்கிறது" என்னும் கருத்துப்பட இந்த சுரேந்திரா பிரசாரம் செய்துவருகிறார்.

இந்தப் பிரசாரத்தின் நோக்கம் என்ன? இந்தப் பிரசார இயக்கத்தின் முக்கிய கர்த்தா போக்குவரத்துப்பகுதி மந்திரி கொத்தலாவலை என்று சொல்லப்படுகிறது.

அரசாங்கம் தம்பட்டமடிக்கிறபடி தொழிலாளரின் வாழ்க்கைநிலை முன்னேறியிருக்கிறதா? வேலையில்லாத் திண்டாட்டம் ஒழிந்துவிட்டதா? நேர்மாறாக, வேலையின்மை வரவர அதிகரித்துக்கொண்டே வருகிறது. இந்த வேலையின்மையை ஒழிப்பதற்கு இலங்கை அரசாங்கம் யுத்தம் முடிந்து இவ்வளவு காலமாகியும் உருப்படியான எவ்வகைத் திட்டத்தையும் தயார் செய்யவில்லை.

# தொகுதிநிர்ணயசபை

## மேலும் பலர் சாட்சியம்

தொகுதி நிர்ணயச்சபை சென்ற சனிக்கிழமை மீண்டும் யாழ்ப்பாண நகரமண்டபத்திற் கூடியபோது இலங்கைத் தேசியத் தமிழர் சங்கச் சார்பாக நியாயவாதி ஸ்ரீ S. R. கனகநாயகம் சாட்சியம்கொடுத்தார்.

அவருக்குப்பின் மிஸ்ரர் C R தம்பையாவும் ஸ்ரீ V. S. கார்த்திகேசுவும் சாட்சியம் கொடுத்தனர். கிறிஸ்தவர்களுக்கெனத் தனியான ஸ்தானம் வேண்டியதில்லை என்றும், பொதுத் தொகுதிகள் மூலமாகக் கிறிஸ்தவர் பாராளுமன்றத்துப் பிரதிநிதிகளாகப் போகக்கூடிய நிலைமை வடமாகாணத்தில் உண்டு என்றும் மிஸ்ரர் தம்பையா கூறினார்.

யாழ்ப்பாணக் குடாநாட்டுக் கரையோர மக்கள் சார்பாக ஸ்ரீ V. சிவப்பிரகாசம் சாட்சியம் கொடுத்தார் இக் குடாநாட்டின் வடபாகத்திலே, குடத்தனையில் இருந்து காங்கேசன்துறை வரைக்கும் ஓர் தொகுதியை உண்டாக்க வேண்டும் என்று அவர் கூறினார்.

புங்குடுதீவு மகாஜன சேவைச் சங்கத் தலைவர் ஸ்ரீ K அம்பலவாணர், மன்னாரைச் சேர்ந்த மிஸ்ரர் அழகக்கோன், மிஸ்ரர் R J. போல் என்பவர்களும் சாட்சியம் கூறினர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வாழ்க அந்தணர் வானவ ரானினம்
வீழ்க தண்புனல் வேந்தனு மோங்குக
ஆழ்க தீயதெல் லாம்அர னாமமே
சூழ்க வையக முந்துயர் தீர்கவே.


# இந்து சாதனம்.

யாழ்ப்பாணம், வியவருல
ஆனிமீ உஅ-ம வெள்ளிக்கிழமை


## ஒற்றுமை வேண்டும்

சூரபன்மன் இராவணன் துரியோதனன் என்னு மிவர்கள் அந்த அந்தக் காலத்திலே நின்ற நிலைமையிலே தான் மிஸ்ரர் சனநாயக என்னுஞ் சிங்கள மனுஷன் இப்பொழுது நிற்கின்ருர்; "தேவர்களுடையசிறையை விடுக்குதி" என வீரவாகுதேவர் சொன்னபோது, சூரன் "இந்த அண்டத்திற்கு அழிவு வந்தால், மேலுள்ள இன்னுமொரு அண்டத்திற் கொண்டுபோய் இத் தேவர்களைச் சிறையிடுவேன்; எனக்கஞ்சி ஒளித்திருக்கும் எஞ்சிய தேவர்களையும் பிடித்துச் சிறையிட உத்தேசித்திருக்கும் நான் என் கையில் அகப்பட்ட தேவர்களைச் சிறைமீட்டு விடுவேனு" என்ருன்; கும்பகர்ணன் தன் தமையனுகிய இராவணனைப் பார்த்து "அண்ணு, சானகியின் சிறையை நீக்கி இராமனுடன் சமாதானஞ் செய் துகொள்" என்று சொன்னபோது, இராவணன் அவனைச் சினந்துபார்த்து "என் ஆவியை விட வந்தாலும் இராகவன் தேவியை விடமாட்டேன்" என்ருன்; கண்ணபிரான் துரியோதனனிடம் தூது சென்ற போது "நாகக்கொடியோனே, வணங்கா முடியோனே, பாண்டவர்கட்கு ஐந்து ஊராயினுங் கொடு, அதுவும் உனக்கு இஷ்டமில்லையாயின் ஐந்து இல்லமாயினும் கொடு" என்று கேட்ட போது, ஒரு ஈ இருக்கும் இடமுங் கொடேன்" என்ருன். ஆனல் இவர்களுக்கு நேர்ந்த நாசம் தமிழ்மக்கள் நன்கறிந்த விஷயமாகும்.

இப்பொழுது சிங்களப்பிரபு சனநாயக என்ன சொல்லுகிருர்; "இந்த இலங்கை இந்தியக் கூலிகள் இங்கில்லாமற் போவதன் பயனுக இலங்கை தேயிலை றபர்த் தோட்டங்க ளெல்லாம் அழிந்தொழிந்து போனலும், இங்குள்ள இந்தியக் கூலிகளுடைய கேள்விக்கு இடங் கொடுக்கமாட்டேன்; இவர்கள் இந்த நாட்டைவிட்டு இந்தியாவுக்கே மீண்டு போகட்டும்; இந்தியருக்கு வாக்குரிமை கொடுப்பதைக்காட்டிலும், இலங்கையில் உள்ள குடிசனத்திற் பாதிப் பேர் பட்டினியாற்சாக, எஞ்சிய பாதிப்பேரையும் இலங்கையில் நல்லாக வாழவிடுதல் உத்தமமாகும்" என்கிருர். என்ன செய்யலாம்! பிருத்தானிய பரிபாலனத்திலுள்ள இந்த இலங்கையில் இப்படியான சர்வாதிகாரம் ஒரு சிங்கள மனுஷனுக்குக் கொடுக்கப்பட்டிருக்கிறது. இந்தியாவிலே சிறந்த பத்திரிகாசிரியர்களு ளொருவராகிய செயின் நிஹால் சிங் என்பவர் யூன் மாசம் 3-ந் திகதி வெளிவந்த "ஓறியன்ற்" என்னுங் கல்கத்தா வார வெளியீட்டில் இலங்கை - இந்தியர் கிளர்ச்சி விஷயமாக எழுதும்போது இக்கிளர்ச்சியின் காரண கர்த்தாவாகிய மிஸ்ரர் சனநாயகாவைப் பற்றியும் அவருடைய யோக்கியங்களையும் எழுதுகின்ருர்; தாம் சனநாயகாவுடன் பல வருடங்களாக ஊடாடியதாகவுந் தெரிவிக்கின்ருர்; அந்த ஆசிரியர் எழுதியதைப் படித்துப் பார்க்கும் போது காலவித்தியாசத்தால் அப்பிரதானியும் பிரதானியாகிருன் என்ற வாக்கு நிசமாகின்றது.

இனி, மிஸ்ரர் ஆநந்ததிசா, ம. அல்விஸ் என்னும் பெயர் கொண்ட உத்தியோகப் பொறுப்பு வகித்திருக்கும் ஒரு சிங்கள மனுஷன் யுத்தகாலத்திலே இந்தியாவிலிருந்து இங்கே இறக்குமதியான அரிசி கோதுமை முதலிய உணவுப்பொருள்களை இலங்கை மக்களோடு தாமும் ஒருஆளாக ஆக்கி உண்டுவிட்டு இரண்டரைவருட காலமாக இந்தியாவி லிருந்து தானிய வகையில் ஒருமணிதானும் வர வில்லையேயென்று நெஞ்சஞ்சாது, வாய் கூசாது பகிரங்கமாகத் தெரிவித்தாரே; இப்படிப் பொய் சொன்னதற்கு நியாயமென்ன? அறியாமையோடுகூடிய சிங்கள மக்கள் இந்தியர்மீது துவேஷங் கொள்ள வேண்டுமென்று தானே; உண்ட வீட்டிற்கு இரண்டகஞ் செய்வான்போன்ற இந்தச் சிங்கள மனுஷன் சொன்ன படிற்றுரையைக் கண்டித்து இந்திய அரசினரின் இலங்கைப் பிரதிநிதியாகிய திரு. M. S. ஆனே அவர்கள் குறித்த இரண்டரை வருட காலத்தில் இந்தியா இலங்கைக்கு ஏற்றுமதிசெய்த தானிய வகை, ஏனைய வெஞ்சனங்களின் விபரம், ஏற்றுமதி செய்யப்பட்ட காலங்கள் எத்தனை யெத்தனை இலட்சம் தொன் நிறைகொண்டன என்ற சகல விபரங்களையும் இலங்கையிலும் இந்தியாவிலுமுள்ள பத்திரிகைகள் மூலமாக எடுத்துக் காட்டியிருக்கிருரே; அவைகளை யெல்லாம் இந்த அல்விசும் படித்துப் பார்த்துவிட்டு ஏதுஞ் சொல்லாமல் ஏன் மௌனஞ் சாதிக்கிருர்?

இலங்கைத் தமிழருடைய தொடர்பு போன்ற நெருங்கிய தொடர்பு சிங்களருக்கும் இந்தியருக்கும் இல்லையாயினும், சிங்களருக்கும் இந்தியருக்கும் தொடர்பு அறவே அற்றுப்போகவில்லை; சிங்களர் வணங்கும் புத்த தெய்வம் இந்தியா; வெள்ளரசுத்தலம் இந்தியா; சிங்களர் யாத்திரை செய்தற்குரிய மேலான தலம் பௌத்த காயா; சிங்களத்தின் தாய்மொழி வட இந்தியாவிலுள்ள "பாலி"; சமய நூல்கள் அந்த மொழியிலேதான்; சிங்களரும் பின் பௌத்த சமய போதகர்களும் ஆதியில் வந்ததும் வட இந்தியாவிலிருந்தேயாகும்.

ஆனதால் இப்பொழுது இலங்கை இந்தியரைச் சிங்களர் புறக்கணிப்பது. அவர்கள்மேற் கொண்ட துவேஷத்தினலே வேறேதும் நல்ல நோக்கம் பற்றியுமல்ல; இந்த இலங்கைத் தமிழர்களாகிய எங்களைத் தனிக்கப் பிடிப்பதற்கும், காலகதியில் இலங்கை இந்திய தமிழரைப் புறக்கணித்தவாறு, இலங்கைத் தமிழரையும் புறக்கணித்தற்குமேயாம். ஆனல், இவைகளை யெல்லாம் அறிந்தும் அறியார்போல இங்குள்ள தமிழ் மக்களும் தமிழ்த் தலைவர்களென்றிருப்பவர்க்ளும் "மண்டெரிதான் வாய்மடுப்பினும் மாசுணம் கண்துயில்ப - பேராபெருமூச்செறிந்து" என்றவாறு, சனநாயக முதலியோர் செய்யும் பொல்லாத சூழ்ச்சியைப் பாராமுகஞ்செய்து வடமாகாணத்தில் இன்னும் எத்தனை தானங்களை அதிகமாகப் பெறலாம், காரைநகரைத் தீவுப்பகுதியோடு சேர்ப்பதோ இல்லையேல் யாழ்ப்பாணப் பெரும்பிரிவிலுள்ள தானங்களிலொன்ருய்ச் சேர்த்துவிடுவதோ என்பதைப் பற்றித்தான் விவாதப்படுகிருர்கள். இவர்களுக்கிடையே அபிப்பிராயபேதங்களும் கொள்கை வித்தியாசங்களும் பல. இங்குள்ள தமிழ்த் தலைவரென்றிருப்போர் இன்னமும் தங்களுள் வேற்றுமை பாராட்டிக்கொண் டிருப்பரேல் தாங்கள் செய்யுந் தவறின் பயனை விரைவில் அடைந்து பச்சாத்தாபப்படுவ ரென்பது திண்ணம்.

# உலகம்பலவிதக் கதை

(முற்ருெடர்—107)

### இவர்களிடம் எப்படிச் சிக்கினீர்கள்?

அன்று பகல் இரண்டரை மணி வரையிலிருக்கும்: ஒரு தானத்திலே புகைரதம் போய்த் தங்குதலும், என்னையும் இறங்கச்செய்து அவர்களெல்லாரும் இறங்கினுர்கள்; கால்மணி நேரஞ் செல்வதற்கிடையில் நடந்து சென்று பஸ்கள் நிற்குந் தானத்தையடைந்து அங்கே ஒரு பஸ்ஸிலே என்னையும் ஏறச்செய்து தாங்களும் ஏறினுர்கள்; அந்த பஸ் வயல்களுக்கூடாகவும் கிராமங்களுக்கூடாகவும் ஓடி மாலை ஐந்து ஐந்தரை மணிவரையில் ஒரு சிறிய பட்டனத்தையடைதலும் அங்கே என்னையும் இறக்கித் தாங்களும் இறங்கிச் சிறிது தூரம் நடந்துபோய் ஒரு வீடு சேர்ந்தார்கள்: அது பெரிய வீடு; கல்யாணம்' பேசிவந்த அந்த முதிய ஐயர்தான் அந்த வீட்டுக்கு எஜமானனெனவும் என்னைக் கூட்டிக்கொண்டு போகும்படி வந்த இரு பெண்களுள் அந்த முதிய பெண்தான் ஐயருடைய மனைவியெனவும் அயிர்த்தேன்; நாங்கள் போய்ச் சேர்ந்தவுடனே இலட்சுமியென்று ஒரு பணிப்பெண்ணை அந்த ஐயர் கூப்பிட்டு எல்லாரும் ஸ்நானம் பண்ணவேணும். வெந்நீர் ஆயத்தம் பண்ணு என்றுசொல்ல. "ஆம் சாமி" என்று சொல்லிவிட்டு அந்தப் பெண் வெந்நீர் வைப்பதற்காகக் கிணற்றண்டை போய்விட்டாள; இதற்கிடையில் பிரயாணஞ்செய்த ஆயாசத்தினுலும் கவலை மேலீட்டினுலும் நான் இருந்த இடத்திலேயே படுத்து உறங்கிவிட்டேன்; அரைமணி நேரம் உறங்கியிருப்பேனே இல்லையோ, அறியேன்; அந்த இலட்சுமி என்னைவந்து எழுப்ப, நான் திடுக்குற்று விழித்தெழுந்தேன்; "வெந்நீர் வைத்தாகிவிட்டது:வாருங்களம்மாஸ்நானம்பண்ண" என்று அவள் சொல்ல, நான் ஸ்நானஞ் செய்தவுடன் கட்டுதற்காகிய சேலை சட்டைகளைப் பெட்டியைத் திறந்து எடுக்கமுயன்றபோது "அம்மா, நீங்கள் சும்மா எழுந்து வாருங்கள்; சேலை சட்டை புதியன கிணற்றடியில் உண்டு" என்று சொல்லிக் கூட்டிக்கொண்டு போனுள்; அப்பொழுது இரவு 7 மணிவரையிலிருக்கும்; அந்த இலட்சுமி யென்பவள் நான் ஸ்நானம் பண்ணுமுபே தெல்லாம் என்னைக் கவலையோடு உற்றுப் பார்த்தவண்ணம் நிற்பதை அவதானித்தேன்; நீ இங்குள்ள பணிப்பெண்ணு என்று நான் கேட்க, 'ஆம், அம்மா, நீங்கள் யார்? எங்கிருந்து வருகிறீர்கள்' இவர்களிடம் எப்படிச் சிக்கினீர்கள்" என்று நாற்புறமும் திரும்பிப் பார்த்துப்பார்த்து என்னை வினவினுள்; "இவர்களிடம் எப்படிச் சிக்கினீர்கள்" என்று அந்தப் பெண் வினவிய கடைசி வினு, என் மனத்தில் முந்தியிருந்த சந்தேகத்தை இன்னுந் தடிக்கச்செய்து என்னைப்பெருங் கவலைக்குள்ளாக்கிவிட்டது.

### உறக்கம் எப்படி வரும்?

தேற்றுவாரில்லாமல் என் கவலையை நானே தேற்றிக்கொண்டு இலட்சுமியைப் பார்த்து, "இலட்சுமி, உன்னைப் பார்த்தால் ஒரு நல்ல பிள்ளைபோற் காணப்படுகிருய்; என் வரலாறு முழுவதையும் பின்பு நான் உமக்கு விபரமாகச் சொல்லுகிறேன்; இவர்கள் யார்? உண்மையாகப் பிராமணர்களா? இவர்களுடைய தொழிலென்ன என்ற இவைகளை நீ எனக்குச் சொல்லுகிருயா?" என்று கேட்க, இலட்சுமி, "அம்மா, இவர்கள் உண்மையான பிராமணக் குடும்பத்தைச் சேர்ந்தவர்கள்; தங்கள் குலங்கோத்திரத்திற்குரிய ஆசார ஒழுக்கங்களை இடையிடையே அந்தச் சாமி விட்டாலும், அம்மாள் ஒருபோதும் விடமாட்டாள்; அந்தச்சாமியின் தொழிலைப்பற்றிப் பிறகு சொல்லுகிறேன் அம்மா; நீங்கள் சீக்கிரம் ஸ்நானஞ் செய்துவிட்டுப் போய்ப் போசனஞ் செய்யுங்கள்: உங்களை அவர்கள் எதிர்பார்த்தவண்ணமிருக்கிருர்கள்" என்று சுருக்கமாகச் சொல்லி முடித்தாள்; அப்படியே நானும் ஸ்நானஞ்செய்து உடனே போசனம் முடித்துக்கொண்டு அவர்கள் எனக்கெனக் காட்டிவிட்ட அறையுட் போய்ப் படுத்தேன்; ஆனல், எனக்கு உறக்கம்வரவில்லை; சற்றுநேரம் செல்ல, இலட்சுமி "அம்மா, உறங்கிவிட்டீர்களா" என்று சொல்லிக்கொண்டு கையிற் பாய் தலையணையுடன் நான் படுத்துக் கிடக்கும் அறையின் கதவைத் திறந்துகொண்டு உள்ளே வருதலும் 'உறங்கவில்லை இலட்சுமி; எனக்கு உறக்கம் எப்படி வரும்' என்று பதில் சொல்லிவிட்டு இந்த அறையுள்தானு நீ படுப்பது என்று கேட்டேன்; "இல்லையம்மா, நான் படுப்பது வேருரிடம்; இன்று உங்களுக்குத் துணையாக வந்து இந்த அறையிலே படுக்கும்படி பெரியம்மாள் சொன்னுள்; அதனுலேதான் வந்தேன்; ஏன் அம்மா, நான் இதற்குட் படுப்பது உங்களுக்குச் சம்மதந்தானே" என்று இலட்சுமி கேட்க, "சம்மதமா, நூறுமுறையும் சம்மதம்; இந்த அந்நியவூரிலே நீதானே எனக்கு உற்றதுணை; நீ ஒவ்வொரு நாளும் இங்கேயே வந்து படுத்தால் எனக்கு அதிக ஆறுதலாக விருக்கும்" என்றேன்; "எனக்கும் இதுதான் அம்மா விருப்பம்" என்று சொல்லிக்கொண்டு நான் கிடந்த கட்டிலுக்கருகே நிலத்திலே பாயை விரித்துத் தலையணையையிட்டுக்கொண்டு இலட்சுமியும் படுத்துக்கொண்டாள்.

### "பிச்சை வேண்டாம் தாயே நாயைப் பிடி."

"இலட்சுமி உறக்கம் வருகிறதா?" என்று நான் கேட்க, இல்லையம்மா

தொடர்ச்சி 5ம் பக்கம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அயல் நாடுகளுடன் நேச வளர்ச்சி

## சுபாஷ் சந்திரபோஸின் பேரவல் ஐரிஷ் தலைவரின் மனப்பூர்வமான ஆசி

### சிங்கப்பூருக்கு ரோஜோ விஜயம்

(முற்றொடர்)

**மந்திரிகள் நியமனம்:**

அடுத்தபடியாக ஸ்ரீ ஜுத் சுபாஷ் சந்திரபோஸ், தற்காலிகமாக, இந்திய அரசாங்கம் ஒன்றை ஏற்படுத்தினார். அந்த அரசாங்கத்துக்கு நேதாஜி அவர்களே தலைவரானார். பின் வருவோர் மந்திரிகளாக நியமிக்கப்பட்டனர்.

குமாரி. லக்ஷ்மி சுவாமிநாதன்: பெண்கள் விஷயமான கருமங்களுக்கு

ஸ்ரீ S. A. ஐயர்: பிரசார மந்திரி

ஸ்ரீ A. C. சட்டர்ஜி: பொக்கிஷ மந்திரி

ஸ்ரீ A. M. ஸஹாய்

ஸ்ரீ ருஷ்பிகாரிபோஸ், பிரதம ஆலோசகர்.

இவர்களே பிரதான மானவர்கள் இவர்களைவிடப் பல ஆலோசகர்களும் அதிகாரிகளும் நியமிக்கப்பட்டனர்

தற்காலிகமாக இந்திய அரசாங்கம் ஸ்தாபிக்கப்பட்ட அதேதினம் இச்செய்தி உலகெங்கும் அறிவிக்கப்பட்டது. இப்படியான ஓர் அரசாங்கத்தை ஏற்படுத்தவேண்டி நேர்ந்த அவசியத்தை சுபாஷ்போஷ் அறிவித்தார். இச்சுதந்திர இந்திய அரசாங்கத்துக்கு, ஜெர்மனி, ஜப்பான், இற்றலி, மஞ்சூக்கோ, தாய்லாந்து சீனத்திலிருந்த நாங்கிங் அரசாங்கம், பர்மா முதலிய ராஜ்யங்கள் பூரணமாக ஆசிகூறி, அதனை வரவேற்றன அயர்லாந்து தனது ஒப்புயர்வற்ற தலைவரான ஈமன்டி. வேலரா மூலம், இந்தச் சுதந்திர இந்திய அரசாங்கம் ஸ்தாபிக்கப்பட்டதற்கு மகிழ்ச்சி தெரிவித்தது.

**லட்சியங்கள் என்ன?**

அந்த ஆண்டு அக்டோபர் மாதம் 23-ந் திகதி ஓர் பெரிய கூட்டம் சிங்கப்பூரில் நிகழ்ந்தது. அக்கூட்டத்தில் நேதாஜி சமுகமளித்தார். சுதந்திர இந்திய அரசாங்கத்தின் நோக்கமென்ன? லட்சியங்கள் என்ன என்னும் இன்னோரன்னவற்றைப்பற்றி வீரன் போஸ் அன்று அச்சந்தர்ப்பத்தில் உலக மக்களுக்கு எடுத்துரைத்தார். பாரத நாட்டுக்குச் சுதந்திரம் பெற்றுக்கொடுப்பதற்கு மூன்றே மூன்று மார்க்கங்கள் உண்டு. அவை: 1 இங்கிலாந்து, இனி ஒன்றும் செய்ப முடியாது என்ற நிலையில் தானகவே இந்தியாவுக்குச் சுதந்திரத்தைக் கொடுக்க அதனைப் பெறுதல். 2 இந்த யுத்தத்தில் வெற்றி யடையும் வல்லரசுகளிடம் இருந்து இந்திய சுதந்திரத்தை ஓர் சன்மானமாகப் பெறுதல் 3 எம்முடைய தியாகத்தினுல், எம்முடைய திறமையினுல் நாமே அச்சுதந்திரத்தைப் பெறுதல் இந்த மூன்று விதமான வழிகளில் எந்த வழியை நீங்கள் கைப்பற்றுகிறீர்கள் என்று சுபாஷ்போஸ், அங்கு குழுமியுள்ள லட்சக் கணக்கான மக்களைக் கேட்டார். மூன்ருவது வழியே எமக்கு வேண்டும், நாங்கள் எல்லோரும் இரத்தம் சிந்தித் தியாகஞ் செய்ய ஆயத்தம் என்று அந்த ஜன சமுத்திரம் கூறியது. உடனே போஸ் அகமகிழ்ந்தார். சுலபமாக, மற்றவர்களுடைய தயவால் அல்லது உதவியாற் கிடைக்கும் சுதந்திரம் நிலைநிற்கமாட்டாது. ஆனல் இரத்தஞ் சிந்திப் பெறும் சுதந்திரமோ புனிதமானது; அது என்றென்றும் நிலைநிற்குமென்று சுபாஷ் சந்திரபோஸ் விளக்கினுர். இன்னும் இப்போது நிறுவப்பட்டுள்ள சுதந்திர அரசாங்கம் ஓர் தற்காலிக ஒழுங்குதான்: அதன் நோக்கம் எம் சத்துருவுடன் போர் செய்தல். எம்முடைய முயற்சிகளின் பயனுக நாங்கள் பாரதநாட்டில் கால் வைத்து அந்நியரைத் துரத்தியவுடன், இப்போது நான் செய்துவைத்திருக்கும் ஒழுங்கு ஒழிய, பொதுஜனங்களால் தெரியப்பட்ட, பொதுமக்களுக்கென்றே ஏற்படுத்தப்பட்ட ஓர் அரசாங்கம் அமைக்கப்படும் அதற்கு முன்னர் நீங்கள் எல்லாரும் எனக்கு உங்கள் பூரணமான ஒத்துழைப்பையும் உதவியையும் அளிக்கவேண்டும் என்று கூறினுர். உங்களில் ஒவ்வொருவரும் எங்களுடைய புனிதமான இந்த முயற்சியில் ஈடுபடவேண்டும். அப்படி நீங்கள் ஈடுபட்டு உங்கள் மனப்பூர்வமான உதவியைத் தருவீர்களேயானல், எமக்குச் சுயராச்சியம் நிச்சயம் கிட்டும் என்பதை உத்தரவாதம் செய்து தருகிறேன். இந்திய தேசிய ராணுவத்துக்கு இன்று 3 லட்சம் வீரரும், 3 கோடி ரூபாவும் ஆரம்பத்தில் வேண்டும் என்று சுபாஷ்போஸ் கூறினுர்.

**பெண்கள் படை**

பெண்களும் ஆண்களுடன் சமத்துவமாகத் தொண்டாற்ற வேண்டிய தன் அவசியத்தையுணர்ந்து, சுபாஷ் போஸ் பெண்களைக் கொண்ட ஓர் பட்டாளத்தையும் ஸ்தாபித்தார். ஜான்ஸி ராணி ராணுவம் என்பது அதன் பயர். இந்தப் படையிலுள்ள பெண்கள் துப்பாக்கி ஏந்தி யுத்தம் செய்வதோடு மாத்திரம் நிற்கவில்லை. யுத்தத்திற் காயமடைந்தவர்களுக்குச் சிகிச்சை செய்தல், முதலாம் பணிகளையும் இந்தப் பெண்கள்படை செய்துவந்தது. இதற்குத்தலைவியாகவிருந்தவரே சென்னையைச்சேர்ந்த குமாரி லக்ஷ்மி சுவாமிநாதன். இது நிற்க, சுபாஷ் சந்திரபோஸ் ஜெர்மனியில் இருந்தபோது ஓர் படையைத் திரட்டினுர் என்று ஏற்கெனவே கூறியிருந்தோமல்லவா? அதற்குப் பெயர் புலிப்படை. அதில் 500க்கு மேற்பட்ட வீரர்கள் இருந்தனர். அதற்கு அசீஸ் கான் என்பவர் தலைவராகவிருந்தார். சுபாஷ்போஸ் ஆசியாவுக்கு வந்தபின் இந்தப்படை ஐரோப்பாவில் இருந்துகொண்டே பல அரிய தொண்டுகளை ஆற்றிவந்தது இந்தக்காலத்தில் ஜப்பானியப் பிரதம மந்திரி ரோஜோ ஓர்சமயம்சிங்கப்பூர்க்கு விஜயம்செய்து சுதந்திரப் படையின் அணிவகுப்பைப் பார்வையிட்டு மிகவும் சிலாகித்துப் பேசினுர்

**அந்நிய நாடுகளின் உறவு**

இந்தியா சுதந்திரம் பெற்றதும் அயல் நாடுகளுடன் நேச பான்மையுடன் இருந்து செல்வாக்கடைய வேண்டும் என்பது சுபாஷ் போஸின் ஆசை. அதற்காக அவர் பர்மா, சியம் சீனம், பிலிப்பைன் முதலிய நாடுகளுடன் பேச்சுவார்த்தைகள் ஆரம்பித்து நேசத் தொடர்பை ஏற்படுத்தினுர். இந்த நாடுகள் ஒவ்வொன்றுக்கும் தாமே நேரில் விஜயம்செய்து அவ்வத்தேச [illegible] டர்புவை [illegible]

# சபாஷ்! இலங்கை

## பிரிட்டிஷ் மந்திரி புளுகின்ருர்!

இங்கிலாந்திலே தொழிற்கட்சி அதிகாரத்துக்கு வந்து இலங்கைக்குப் பொறுப்பாட்சி கொடுத்துவிட்டது என்றும், அதனைப்போலவே ஏனைய குடியேற்ற நாடுகளுக்கும் முற்போக்கான அரசியல் காலக்கிரமத்தில் வழங்கப்படும் என்றும் குடியேற்றநாட்டு மந்திரி மிஸ்ரர் ஜோர்ஜ் ஹால் பிரிட்டிஷ் பாராளுமன்றத்தில் சென்ற செவ்வாய்க்கிழமை கூறினுர். அவர் மேலும் கூறியதாவது:

"சோல்பெரித் திட்டத்தை ஆதாரமாகக் கொண்ட ஓர் அரசியலை இலங்கையில் நிர்மாணிப்பது என்றஎங்கள் தீர்மானத்தைச் சென்ற அக்டோபர் மாதத்தில் நான் வெளியிட்டேன். என்னுடைய அறிக்கையை இலங்கையர் ஏகோபித்து வரவேற்று அதற்கு அங்கீகாரம் அளித்தனர். எனவே நாம் இப்போது புதிய அரசியற்றிட்டத்தை வழங்கியுள்ளோம். அத்திட்டத்தின்படி இலங்கையில் உள்நாட்டு நிருவாகம் முழுவதும் இலங்கை மக்கள் பொறுப்பிலேயே இருக்கும் ராணுவம், பாதுகாப்பு, வெளிநாட்டு வியவகாரங்கள் என்பன மாத்திரமே எம்மிடம் இருக்கும். இது எவ்வளவு முன்னேற்றமான விஷயம் என்பதை நாம் எல்லாரும் நன்கு சிந்திக்க வேண்டும்."

# அதிகாரம் பெற

## மானிப்பாய்க் கிராமச்சங்கத் தீர்மானம்

(நமது நிருபர்)

கிராமத்தில் நிகழும் அற்ப பிணக்குகளையும் வழக்குகளையும் தீர்த்து வைக்கத் தனக்கு அதிகாரம் வழங்கப்பட வேண்டும் என்று மானிப்பாய்க் கிராமசங்கம் அரசாங்கத்தைக் கேட்கத் தீர்மானித்திருக்கிறது.

ஷை கிராமச்சங்கத்தின் மாதாந்தக் கூட்டம் தலைவர் திரு. வி. தியாகராஜா தலைமையில் நடைபெற்றது. இக் கூட்டத்தில் கீழ்க்கண்ட தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

"கடந்த நான்கு வருடங்களிலும் பல சச்சரவுகளையும் சமரஸமாகக் கிராமச்சங்கத் தலைவர் தீர்த்து வைத்துள்ளார். காணித்தகாறுகள் போன்றவைகளையும் மற்ற சிறு குற்றங்களையும் சமரஸமாகத் தீர்த்து வைக்கும்படி தலைவரை பலர் கேட்டுக்கொண்டுள்ளார்கள். பழைய பஞ்சாயத்து போன்ற ஒரு சமரஸ சபையை கிராமத்தில் மானிப்பாய் கிராமச்சங்க ஆதாவில் அமைக்கும்படி தலைவருக்கு கிராமச்சங்கம் அதிகாரம் அளித்துள்ளது, அந்த சமரஸ சபையில் அக் கோயிற்பற்றைச் சேர்ந்த வயது முதிர்ந்தவர்கள் தான் இருக்கவேண்டும், இந்த சமரஸச் சபை கிராமத்தில் ஏற்படும் சிறு குற்றங்களை சமரஸமாகத் தீர்த்து வைக்கவேண்டும் இது சம்பந்தமாக விசாரணைகளை நடத்தி அவற்றைச் சமரஸமாகத் தீர்த்து வைக்க வேண்டிய அதிகாரத்தைத் தலைவருக்கு வழங்கும்படி அரசினரை இக் கிராமச்சங்கம் கேட்டுக்கொள்கிறது."

# 2 வருஷத்திற்குள் சுயராஜ்யமாம்!

## சேர் ஒலிவர் குணத்திலகாவின் பரிபூரணமான நம்பிக்கையாம்

### இங்கிலாந்தின் வாலைப்பிடிக்கும் விந்தை

சேர் ஒலிவர் குணத்திலகர் இப்போது இலங்கையின் பொப்பரு வர்த்தகம் சம்பந்தமாக லண்டனில் நிற்கிருர். வர்த்தக விஷயமாகப் பேச்சு வார்த்தைகள் நடத்தச் சென்றிருக்கும் இவர், இலங்கைக்கு இன்னும் இரண்டே இரண்டு வருஷ காலத்துக்கிடையில் சுயராச்சியம் வந்துவிடப் போகிறது என்று "க்ளோப்" என்ற பத்திரிகையின் நிருபர்க்குக் கூறியுள்ளார்.

சேர் குணத்திலகா எண்ணுவது பூரண சுயராஜ்யமல்ல. இங்கிலாந்தின் வாலைப்பிடித்துக்கொண்டு, இங்கிலாந்தின் பாதுகாப்புக்குள் இருக்கும் குடியேற்றநாட்டந்தஸ்தாம் அரசியலாம். இதனை அவர் பட்டவர்த்தனமாக ஷை பத்திரிகா நிருபர்க்குக் கூறியிருக்கிருர்.

நாடுகளில் உள்ள கைத்தொழில் கமத்தொழில்விருத்தியை அவதானித்துப் பயிற்சிபெறுதற்காக இந்திய வாலிபர்களை அந்நாடுகளுக்குத்தனது அரசாங்கத்தின் செலவில் அனுப்பிவைத்தார்; இதுமாத்திரமன்றி, இராணுவ சம்பந்தமான பயிற்சிகளைப் பெறப் பல இந்திய வாலிபர் ஜப்பானுக்கு அனுப்பப்பட்டனர். இவர்களுக்கு 4 ஆண்டு தொடக்கம் 6 ஆண்டுவரை யிற் பயிற்சி அளிக்க ஏற்பாடுகள்செய்யப்பட்டிருந்தன. இப்போது யுத்தம் முடிந்துவிட்டது. ஜப்பானும் தோல்வியுற்று அடிமைக் குழியிற் கிடக்கிறது, அங்கு பயிற்சிக்கனுப்பப்பட்ட நம் இந்தியச் சிறுவர், தம் தாய்நாட்டிற்கு இப்போது திருப்பியனுப்பப் படுகின்ருர்கள். இந்தச் சிறுவர்களை, இந்திய தேசியக்காங்கிரசால் நியமிக்கப்பட்டுள்ள சகாயச்சபை கண்கா[illegible] வேண்டிய உதவிகளைச் செய்[illegible]

(வரும்)

# வேலைநிறுத்தமுடிவு

## காங்கிரஸின் கட்டளை

உருளிவெளித் தோட்டம் விஷயமாக இலங்கை முழுவதும் நிகழ்ந்துவந்த இந்தியத் தொழிலாளர் வேலை நிறுத்தம், இந்தியக் காங்கிரஸ் மகாசபையின் வேண்டுகோள்விப்படி சென்ற 10-7-46 முதல் கைவிடப்படலாயிற்று இவ்விஷயமாக இந்தியக் காங்கிரஸ் காரிய நிருவாகசபை யோசித்து ஓர் முடிவுக்கு வந்தது.

அகில இந்திய காங்கிரஸ் காரிய சபையின் கூட்டத்தில், இலங்கையில் இந்தியத் தோட்டத் தொழிலாளர் அனுஷ்டித்து வரும் வேலை நிறுத்தத்துக்குக் கவலை தெரிவித்தும், மேற்படி தொழிலாளரின் தியாகத்தைப் பாராட்டியும் சமரசப் பேச்சுக்களை ஆரம்பித்து வைப்பதற்கான சூழ்நிலையை உண்டு பண்ணுவதற்குச் சாதகமாக இருக்கும் பொருட்டு இலங்கை இந்தியர் வேலை நிறுத்தத்தை நிறுத்திக் கொள்ளவேண்டுமென்றும் யோசனை கூறி தீர்மானமொன்று நிறைவேற்றி வைக்கப்பட்டது.

காங்கிரஸ் காரியசபையார், இலங்கை இந்தியர் விஷயமாக அனுதாபம் தெரிவித்தும், இவ்வித வேலை நிறுத்தம் ஏற்பட வேண்டிய சூழ்நிலை உருவானதற்காக வருந்தவதுடன் பண்டித ஜவஹர்லால் நேரு ராஜாஜி திரு. அரியநாயகம் திரு. ஜி. ராமச்சந்திரன் இவர்களடங்கிய ஒரு விசேஷ சபையை நியமித்து, இலங்கை அரசாங்கத்துடன் பேச்சுவார்த்தைகள் நடத்தி சமரசமான ஒரு முடிவு செய்வதென்றும் தீர்மானித்துள்ளது

விசேஷஅழைப்பின்மீது ராஜாஜியும் இலங்கை இந்தியர் காங்கிரஸ் பொதுக் காரியதரிசி ஜனுப் அப்துல் அஸீசும் கூட்டத்துக்கு வந்திருந்தனர்.

திரு அரியநாயகம் அவர்கள் யாழ்ப்பாணத்தைச் சேர்ந்தவர் என்பது ஈண்டுக் குறிப்பிடத் தக்கதாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆலய வழிபாடு

( காரைநகர் ஸ்ரீமத், சி, சுப்பிரமணிய தேசிகர் )

நன்று; நாள்தொறும் நம்வினை
போயறும்;
என்றும் இன்பம் தழைக்க
இருக்கலாம்;
சென்று நீர்திரு வேட்களத்
துள்ளுறை
துன்று பொற்சடை யானைத்
தொழுமினே.

—ஆளுடையபிள்ளையார்.

கடவுளும் உயிர்களும் உலகமும் நல்வினை தீவினைகளும் மறுபிறப்பும் உண்டு என்னுங் கொள்கையடைய மக்கள் யாவரும் ஆலய வழிபாடு செய்வது நன்று; சாலவும் நன்று மக்கட் பிறவியின் நோக்கம் அரன் பணிக்காக அன்றோ. வாழ்த்த வாயும் நினைக்க மடநெஞ்சும், தாழ்த்தச் சென்னியும் தந்த தலைவனை, சூழ்த்த மாமலர் தூவித் துதியாதே, வீழ்த்தவா வினையேன்நெடுங்காலமே என்று எங்களுக்கு அறிவுறுத்தி வருந்துகின்றார் அப்பர் சுவாமிகள். நோய்ப்பிறப்பு இலாத கண்ணுதலைப் பூசியா வாய்ப்புறத் தலைக்கொரு மதி பெரு நரனுப் பிறப்புற்றதில் அறிஞர் எள்ளுறு நாய்ப்பிறப்பு ஆற்றவும் நன்று நன்றரோ - என்பதனால் மக்களாய்ப் பிறந்து கடவுளை வழிபடாதிருத்தலினும் நாயாய்ப் பிறப்பது மிகநன்று என்கிறார் சிவப்பிரகாச சுவாமிகள். என்னில் ஆரும் எனக்கு இனியார் இல்லை - என்னிலும் இனியான் ஒருவன் உளன் - என்னுளே உயிர்ப்பாய்ப் புறம்போந்து புக்கு - என்னுளே நிற்கும் இன்னம்பர் ஈசனே! என்பதனால் நம்மினும் நமக்கு நல்லவர் - நமக்காகவே யுள்ளவர் - நமக்காக அன்றித் தமக்கென ஒரு தொழிலும் இல்லாதவர் — நம்பால் யாதும் வேண்டாத நிறைவுடையவர் ஒருவர் உளர் என்பதும், அவர்பால் அன்பு பூண்டு ஒழுகுவதே நம் கடன் என்பதும் விளங்கும். ஏன் வழிபடவேண்டும்? நமக்கென்ன குறை யிருக்கிறது? நமக்கென்ன வேண்டும்! எனின், நல்லது; சாலவும் நல்லது; வினைகளும் வினைகளுக்கு மூலாகாரணமாகிய மூலமலமும் வினைகளைச் செய்தற்குரிய தநு கரண புவன போகங்களும் நீங்கும்; நித்தியமாகிய பேரின்பம் பெருக இருக்கலாம் என்று ஆளுடைய பிள்ளையார் விடைகூறுகிறார்.

நமது உய்திகருதி நம்வினைக்கீடாக இறைவன் உதவிய உடம்பைக் கொண்டு நாம் செய்யவேண்டிய கடமையைச் செய்யாமல் அதற்கு வேண்டிய உணவைக் கொடுத்தலும் ஆடை ஆபரணங்களால் அலங்கரித்தலும் அது வேண்டும் சுகபோகங்களை நுகர்வித்தலும் ஆகிய உடற் கூலிக்காகவே நம் வாழ்நாள் முழுவதையும் செலவுசெய்து பாழாக்குவோமானால் நாம் வந்த பிறந்த காரியம்பார்ப்பது எப்போது! பொருளையும் இன்பத்தையும்பெரிதாகமதித்து உடல் வளர்கியையே நாடினால் அறமாகிய வழிபாட்டைக்கொண்டு உயிர் வளர்ச்சியையும் அதுவாயிலாக என்றும் இன்பந் தழைக்க இடுதலாகிய பூரணத்துவத்தையும் அடைவது எந்தக் காலம்! இவ்வுடம்பு எப்போது நீங்குமெனபதுந் தெரியாதே! இப்பிறவி தப்பினால் எப்பிறவி வாய்க்குமோ? யாது வருமோ? அதுவுந்தெரியாதே! ஆதலால் காலமுண்டாகவே காதல் செய்து உய்தல்வேண்டும். அப்பர் சுவாமிகள் தன் மனத்தை அழைப்பவர்போல எங்களை அழைக்கின்றார். நரங்கள் லயமடைவேண்டுமானால் எப்போதும் இறைவன கோயிலுக்குப்போய் விடியுமுன் அலகிட்டு மெழுகி புனைந்தேத்தி புகழ்ந்து பாடி தலையாரக் கும்பிட்டு கூத்தாடி சங்கரா சயபோற்றி போற்றி அலைபுனல் சேர் செஞ்சடைஎம் ஆதீ ஆரூரா என்று அலறவேண்டுமாம். இன்னும் மற்றோரிடத்தில் எங்களையே நேரில் அழைக்கின்றார். மனிதர்காள்! இங்கே வம்மின் ஒன்று சொல்லுகேன், கனிதந்தால் தனியே உண்ணவும் வல்லிரே? புனிதன் பொற்கழல் ஈசன் எனும் கனி இனிது சாலவும் எசற்றவர்கட்கே என்பதனால் மனிதர்களே! இங்கே வாருங்கள்! யான் ஒரு பழந் தருகிறேன் அதனை உண்ண உடன்படுவீர்களா? யார்தாம் பழம்உண்ண மறுப்பவர்? இவ்வாறு முதலில் எங்கள் சம்மதத்தைக் கேட்டுக்கொண்டு உலகிலுள்ள மற்றைப் பழங்களெல்லாம் சிறிதுபொழுது இனித்து ஒழிந்துவிடும்; புனிதன் பொற்கழலீசன் என்னும்கனி இனிது; மிகவும் இனியது விரும்பினவர்களுக்கு என்றும் இனியது; இதனை உண்ணுங்கள் என்று இனிய உபதேசஞ் செய்கின்றார் எங்கள் சமயாசாரியர்.

கோளில் பொறியிற் குணமிலவே
எண்குணத்தான்
தாளை வணங்காத் தலை.

(பொய்யில் புலவர்)

### நாவலப்பிட்டி இந்துவாலிபர் சங்கம்

மேற்படி சங்க வருடாந்தக் கூட்டம் 6-7-46 சனிக்கிழமைபிற்பகல் 6 மணியளவில் கதிரேசன் கல்லூரி மண்டபத்தில் நடைபெற்றது. அத்தருணம் திரு க சுப்பிரமணியம் அவர்கள் தற்காலிக தலைவராகத்தெரியப்பட்டு பின்வரும் உத்தியோகத்தர் நிரந்தரமாகத் தெரியப்பட்டனர்

போஷகர்: திரு C. சுப்பிரமணியம், தலைவர்: திரு. C செல்லமுத்து, உபதலைவர்கள்: திருவாளர் S. அருளம்பலம், K. வேலாயுதம், S. இராசரத்தினம் S. கனகசபை, K இராஜலிங்கம், காரியதரிசி: N. முத்தையா, உபகாரியதரிசி: K. மகேஸ்வரம், தனாதிகாரி: M மகாலிங்கம், உபதனாதிகாரி: S. இராசசிங்கம், வாசிகசாலை அதிபர்: S. சுப்பையா, கணக்குப் பரிசோதகர்: முருகேசபிள்ளை.

உத்தியோகத்தர்தெரிவின்பின் மாணிக்கவாசக சுவாமிகளின் குருபூசை விழா சிறப்பாகக் கொண்டாடப்பட்டது. அத்தருணம் ஆசிரியர் வினாசித்தம்பிகோஷ்டியாரின் சங்கீத கதாப்பிரசங்கம் நிகழ்ந்தது. ஈற்றில் பிரமஸ்ரீ S. முத்துச்சுவாமிக் குருக்கள் அவர்களின் குறிப்புரையுடனும் பழைய புதிய காரியதரிசிகளின் வந்தனோபசாரத்துடனும் கூட்டம் இனிது நிறைவேறியது. -கடித

### மாணிக்கவாசக சுவாமிகள் குருபூசைத் திருநாள்

மறவன்புலோ சகலகலாவல்லி வித்தியாசாலையில் ஆனிமீ 19ந் திகதி (3 7-46) புதன்கிழமை பகல் மேற்படி சுவாமிகளின் குருபூசை மிகவுஞ் சிறப்பாக நடைபெற்றது இரவு 7 மணியளவில் திரு எ. பொன்னையா அவர்கள் தலைமையில் தேவார பாராயணத்துடன் கூட்டம் ஆரம்பமாயது. அத்தருணம் பண்டிதர் திரு. க. வேலுப்பிள்ளை அவர்கள், "திருவாசகச் சிறப்பு" என்னும் பொருள்பற்றி ஓர் சிறந்த விரிவுரை நிகழ்த்தினர். அறிஞர்கள் பலர் மேற்படி சுவாமிகளின் சரித்திர சம்பந்தமான குறிப்புகள் பல வழியிலு மெடுத்துப் புகட்டினர். பின் தலைமை ஆசிரியர் நன்றி கூறத் தேவாரபாராயணத்துடன்கூட்டம் 10 மணியளவில் இனிது நிறைவேறியது.

### அநுராசபுரத்திற் பேதி நோய்

அநுராதபுரத்திற் பேதிநோய் இன்னும் குறைந்தபாடில்லை. எனவே அங்கே பௌர்ணிமை தினத்துக்கு வெளியூர்களிலிருந்து யாத்திரீகள் [illegible] அநுமதிக்கப்படமாட்டார்கள்.

# வேம்பின் சூரணம்

(கொழும்பு, ஆயுர்வேத வைத்தியர் க. ஆறுமுகம்பிள்ளை)

வேம்பின், தளிர், இலை, பூ, காய், பழம், பட்டை, வேர் இவைகளை ஆயுள்வேத முறைப்படி சலரோக ஆரம்பத்தில்சூரணங்களாகவும், கஷாயங்களாகவும. பூ, தளிர் இவைகளை உணவுப் பதார்த்தங்களொடு சாப்பிட்டு வருவதால் சலரோகம் உண்டாகமாட்டாது.

இதற்குதாரணம்: அஸ்மரிரோகம், தேசுத்தில் உண்டாவது. சீனிச் சத்துக்கள் அதிகமாயிருப்பதால்.

இரண்டாவது அஸ்மரி ரோகம் உண்டாவது.

பிரமேகம் துர்க்கிருமிகளின் செய்ற்கைகளால் உண்டாகின்றன. வேம்புக்கு துர்க்கிருமிகளை நாசம்செய்யும் சக்தி உண்டு. இந்த உதாரணங்களைக் கொண்டு மந்திரி அவர்களுக்கு வேம்பின் கஷாயத்தால், சலரோகம்நிவாரணப்பட்டது என்பது எமது துணிவு.

மூன்றாவது அதிகமாய் சீனி தேகத்தில் உள்ளவர்களுக்கும் அதிகமாய் துர்க்கிருமிகளை உண்டாக்கும் சக்தி உண்டு.

தந்தரோகம்: அதாவது பற்களை அரித்து நாசம்செய்தல். பல்லறணை, மூரசு கரைதல், வாய் நாற்றம், பற்களில் சீழ் வடிதல் முதலிய ரோகங்களை உண்டாக்கும் தன்மையுண்டு.

மேற்கூறிய ரோகங்களை நிவர்த்திக்கும் சக்தி வேம்புக்கு உண்டு.

நான்காவது: அஸ்மரி ரோகம் பிரமேகம், சன்னிபாதம், விஷசுரம், மகாவாதம், வைசூரி. பெண்களுக்குண்டாம் கெர்ப்பத் தடை முதலிய வியாதிகளை நிவர்த்திக்கும் சக்தி வேம்புக்குண்டு.

வேம்பின் சூரணம்

வேம்பின் வேர்ப்பட்டை கழஞ்சி நாலு. பட்டை கழஞ்சி நாலு. கடுக்காய் கழஞ்சி இரண்டு, தான்றிக்காய் கழஞ்சி இரண்டு, நெல்லிக்காய் கழஞ்சி நாலு. சுக்கு கழஞ்சி ஒன்று, திப்பிலி கழஞ்சி ஒன்று, மல்லி கழஞ்சி ஒன்று, அமுக்கிராய் கழஞ்சி ஒன்று, தாளிசபத்திரி 1 கழஞ்சி ஓமம் 1 கழஞ்சி. இவைகளைச் சூரிய வெப்பத்தில் வைத்து காய்ந்தபின் இடித்து வஷ்திரகாயம் செய்து அல்லது சீலையால் அரித்து இரும்புப்பாத்திரம், அல்லது புதிய மட்பாண்டத்தில் வைத்துக்கொண்டு திரிகடி பிரமாணம், அல்லது மூன்று விரலால் கிள்ளி எடுத்து, சுத்தமான பசுவின் பாலில் போட்டுக்கலந்து சீனி சேர்த்துச் சாப்பிடவும் இப்படி காலை மாலை ஒரு மண்டலம் சாப்பிட்டால் அஸ்மரி ரோகம் என்னும் சலரோகம் நீங்கும். மேற்படிசூரணத்தை சன்னிவாத ரோகத்துக்கும் விஷசுரத்துக்கும் மகாவாத ரோகத்துக்கும்; சுக்கு மிளகு, மல்லி, சம எடை எடுத்து கசாயம்செய்து சோற்றுக் கறண்டி கசாயம் 2 எடுத்து மேற்படி சூரணத்தைக் கலந்து இரண்டுமணிக்கு ஒருமுறை கொடுத்தால், இக் கொடிய வியாதிகள் நீங்கும்.

### மதிப்புரை

கதிர்காமத் திருப்புகழ்
(இலவச வெளியீடு)

ஸ்ரீ கதிர்காம க்ஷேத்திரத்துக்குச் செல்லும யாத்திரீகர்களுக்கு இலவசமாகக் கொடுப்பதற்காக, கொழும்பு செட்டியார் தெரு இந்து கலாபிவிருத்திச் சங்கத்தாரால் தமது 5-ம்இலவச வெளியீடாக இந்நூல் பிரசுரிக்கப்பட்டுள்ளது. வெளியூர்களில் உள்ளவர்கள் தபாற்செலவுக்காக மூன் [illegible] அனுப்பிப் பிரதிகளை இலவசமாகப் பெற்றுக் கொளளலாம்.

# குடைமார்க்ஓடுகள்

நீங்கள் நவமாகக் கட்டியெழுப்பும் கட்டிடங்களுக்கு இன்றியமையாத

## கலிக்கற் ஓடுகள்

இவைகளின் கனம் மிகவும் குறைக்கப்பட்டு, வயிரம் மிகவும் கூட்டப்பட்டிருக்கின்றன. ஆகவே, இவைகளினல் வேயப்படும் கூரைகளுக்குப் பாரம் மிகக் குறைவாயிருக்கும். இவைகளின் கனத்துடன், இவைகளால்வேயப்பட்டிருக்கும் பரப்பை ஒத்துப்பார்த்தால் விசாலம் மிகவும் அதிகமாய்க் காணப்படும்.

காற்றினல் உடையாது. மழையினல் நீர் பொசியாது. மிகவும் கரிசனையாகவும், நுணுநுணுக்கமாகவும் செதய் ஆராய்ச்சியின் பயனுவே இவைகள் தயாரிக்கப்பட்டன.

ஏஜென்ஸ்'

ஜே. சேரூபிம் அன் பிறதர்,
பெரியதெரு, யாழ்ப்பாணம்.

Mis 243 B 12-3— 12-9(வெ)

## திருச்சி ரேடியோ

சனி ஜூலை 13

காலை: 7-15 ஆரம்பம் 7-20 தமிழில் செய்திகள் 7-30 எம் எஸ் நாராயணசாமி ஐயர் வயலின் 8 ஆங்கிலத்தில்செய்திகள் 8-15 சரோஜினி ஜகந்நாதன் பாட்டு 8-20 சித்ரகானம் இசைத்தட்டு 9 முடிவு.

1 எம் எஸ் நாராயணசாமி ஐயர் வயலின் 1.30 அங்கிலத்தில் செய்திகள் 1-40 ஆங்கிலப் பேச்சு 2 தமிழில் செய்திகள் 2 05 ஏ விநாயக முதலியார் பாட்டு 2.45 முடிவு.

மாலை: 5 ஏ விநாயக முதலியார்பாட்டு 5-40 நம்மாழ்வார் பாசுர விளக்கம் 6 ஆங்கிலத்தில் செய்திகள 6.10 அறிவிப்புகள் வானிலை 6.15 கிராம நிகழ்ச்சிகள் 7 சரோஜினி ஜகந்நாதன் பாட்டு 7 10 ஷமிரத் 7.30 தமிழில் செய்திகள் 7-45 க்ளாரம் வெங்கடசாமி நாயுடு வயலின் 9 அங்கிலத்தில் செய்திகள் 9.15 கே பி தேவராஜூ சாக்ஸபோன் 9 30 லண்டனிலிருந்து செய்திகள் 9-40 அறிவிப்புகள் வானிலை 9.45 கே பி தேவராஜூ சாக்ஸபோன் 10 இசைவேளை 10-30 முடிவு.

ஞாயிறு ஜூலை 14

காலை 7-15 ஆரம்பம் 7-20 தமிழில் செய்திகள் 7-30 சுவாமிமலை எஸ் எஸ் கலியாணசுந்தரதேசிகர் பாட்டு 8 ஆங்கிலத்தில் செய்திகள் 8 15 ஜி கல்யாணி வீணை 8-30 இசைப் பயிற்சி பாட்டுகள் 9 முடிவு.

12 ஆரம்பம் 12 20 ஒலிமலர் 1-30 ஆங்கிலத்தில் செய்திகள் 1.40 மாதர்பக்கம் 2 தமிழில் செய்திகள் 2-05 ஜி கல்யாணி வீணை 2-15 நீங்கள் கேட்டவை இசைத்தட்டு 3 முடிவு.

மாலை 5 சுவாமிமலை எஸ் எஸ் கல்யாணசுந்தரதேசிகர் பாட்டு 5.40 தேவாராதனை 6 ஆங்கிலத்தில் செய்திகள் 6.10 அறிவிப்புகள் வானிலை 6.15 கிராம நிகழ்ச்சிகள் 7 எம் கே தியாகராஜ பாகவதர் இசைத்தட்டு 7-15 கைப்பெருள் 7 30 தமிழில் செய்திகள் 7-45 நாகர்மா கமலா பாட்டு 9 ஆங்கிலத்தில் செய்திகள் 9-15 அறிவிப்புகள் வானிலை 9.30 லண்டனிலிருந்து செய்திகள் 9.40 வாத்ய இசை 10.10 இசைவேளை இசைத்தட்டு 10-30 முடிவு

திங்கள் யூலை 15

காலை: 7-15 ஆரம்பம் 7 20 தமிழில் செய்திகள் 7-30 வி நாராயணசாமி வி ஸ்ரீனிவாசன் நாகஸ்வரம் 8 ஆங்கிலத்தில் செய்திகள் 8-15 திருநெல்லூர் இசைத் தொகுப்பு 8.30 தஞ்சாவூர் ஜானகி அம்மாள் பாட்டு 9 முடிவு.

1 ஆரம்பம் 1-30 ஆங்கிலத்தில் செய்திகள் 1.40 தஞ்சாவூர் ஜானகி அம்மாள் பாட்டு 2 தமிழில் செய்திகள் 2-05 தஞ்சாவூர் ஜானகியம்மாள் பாட்டு 2 15 கல்வி ஒலிபரப்பு 2-45முடிவு.

மாலை 5 வி நாராயணசாமி நாகஸ்வரம் 5-40 இசைப்பயிற்சி 6 ஆங்கிலத்தில் செய்திகள் 6-10 அறிவிப்பகள் வானிலை 6.15 கிராமநிகழ்ச்சிகள் 7 இசை ஒலிசை 7-15 தாளவாத்யக்கச்சேரி 7.30 தமிழில் செய்திகள 7-45 ஏ ஜி சுப்பிரமணியம் பாட்டு 9 ஆங்கிலத்தில் செய்திகள் 9-15 கடத்தூர் சங்காசாமையர் வீணை 9-30 லண்டனிலிருந்து செய்திகள 9.40 அறிவிப்பகள் வானிலை 9.45 கடத்தூர் சங்காராமய்யர் வீணை 10 இசைவேளை இசைத்தட்டு 10.30 முடிவு.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இந்திய அரசியல்

## மௌலானு அஸாத்

6 ஆண்டு காலமாகப் பாரதநாட்டின் முடிசூடா மன்னராக விருந்த காங்கிரஸ் தலைவர் மௌலானு அஸாத், சென்றவாரம் தம் பதவியை பண்டிதர் ஜவஹர்லாலிடம் ஒப்படைத்து விட்டார். இந்த 6 ஆண்டு காலத்திலும் மௌலானு அசாத் தம் தாய் நாட்டுக்கு ஆற்றிய சேவைகள் பொன் எழுத்துக்களாற் பொறிக்கப் படத்தக்கன. 'மெய்வருத்தம் பாரார் ......என்ற கவிக்கிணங்க அவர் பாரதநாட்டின் லட்சியம் ஒன்றையே கருதித் தம்மாலான முயற்சி அனைத்தையும் ஆற்றி இன்று பாரத நாடு சுதந்திர மாளிகையை அணுகும் நிலைக்குக் கொண்டுவந்துவிட்டார். இவர் தலைமைப் பதவியைப் பண்டிதர் ஜவஹர்லாலுக்கு மாற்றிய தினத்தன்று பண்டிதர் நேரு, வல்லபாய் படேல் முதலிய சகல தலைவர்களும் சமர்ப்பித்த மதிப்புரைகளே இந்த மகான் ஆற்றிய சேவைகளுக்குப் போதிய சான்றாகும்.

## நேரு கையேற்ருர்

மௌலானு அசாத்திடம் இருந்து தலைமைப் பதவியை ஏற்ற பண்டிதர் நேரு தம் கொள்கையை விளக்கி ஓர் பிரசாரணஞ் செய்தார். பிரிட்டிஷ் மந்திரிகள் மூவரும் வகுத்த திட்டத்தைக் கையேற்றபடியினுல், இனி பிரிட்டிஷார் வகுத்தபடியே நடத்தித் தீருவது என்பது கருத்து அல்ல அரசியல் நிர்மாணசபை மூலமாக ஏதும் நன்மைகளைப்பெறலாம், எமது லட்சியமான சுதந்திரத்தை அடைய முடியும் என்ற நம்பிக்கையுடன்தான் மந்திரிகளின் நீண்டகாலத் திட்டத்தை நாம் கையேற்ருேம். ஆனுல் இந்த நிர்மாணசபை மூலமாக நாம் எம் லட்சியத்தை அடைய முடியாது என்று கண்டவுடனேயே நாங்கள் அதனைவிட்டு வெளியேறிக் கிளர்ச்சி செய்யப் பின்னிற்க மாட்டோம் என்று பண்டிதர் நேரு தெள்ளத் தெரிய விளக்கிவிட்டார்.

## தீவிரவாதிகளின் எதிர்ப்பு

காங்கிரஸ் பாராளுமன்றம் போன்ற காங்கிரஸ் கொமிற்றியின் உத்தரவையும் சம்மதத்தையும் பெற முன்னரேயே காங்கிரஸ் காரிய நிர்வாகசபை, மூவர் திட்டத்தை ஏற்றுக்கொண்டது பிழை என்பது காங்கிரசில் உள்ள தீவிரவாதிகளின் கொள்கை. அன்றியும் மூவர் வகுத்துள்ள அரசியல் நிர்மாணத் திட்டம் காங்கிரஸ் வாதிகளை அகப்படுத்த வைத்துள்ள பொறிக்கிடங்கு; அதனை ஓர்போதும் ஏற்றுக்கொள்ளவொண்ணுது என்று தீவிரவாதிகளான ஸ்ரீ ஜுத் ஜெயப்பிரகாஷ் நாராயணர் முதலியோர் வாதித்தனர். இவர்களில் ஒருவரான அருணு அஸாப் அலி, காங்கிரஸ் தலைவர்கள் இதுகாறும் அநுட்டித்து வரும் "விளக்கெண்ணெய்க் கொள்கைகளை"க் கண்டித்து, இனியும் இப்படி நடக்காமல் தீவிர போராட்டத்தை ஆரம்பித்துப் பிரிட்டிஷாரிடம் இருந்து சுதந்திரத்தைப் பறிக்கவேண்டும் என்று கூறினர். இன்னும் அவர் மகாத்மா காந்தியை நோக்கி, "இவ்வளவு காலமும், நாங்கள் உங்களுடைய ஆஞ்ஞைக்குக் கீழ்ப்படிந்து நடந்தோம் உங்கள் வழிப்படி நடந்தோம். எங்களுக்குச் சுயராச்சியம் கிட்டிவிட்டதா? எனவே இனி நாங்கள் செய்யும் முயற்சிகளில் எங்கள் சொற்படி தாங்கள் கேட்கவேண்டும்" என்று கூறினர்.

## அதிகாரபீடத்துக்கு வெற்றி

தீவிரவாதிகளின் எதிர்ப்புப் பலமாக இருந்தபோதிலும், காங்கிரஸ், பாராளுமன்றம், காங்கிரஸ் அதிகார சபை தீர்மானித்த நிர்ணயங்களை அங்கீகரித்துவிட்டது. ஆனுல் இதில் ஓர் விஷயம் குறிப்பிடத்தக்கது. முந்தி ஒருபோதும் இல்லாதவாறு இப்போது காங்கிரஸ் தீவிரவாதிகளின் தொகை பெருகிக்கொண்டே போகிறது. இப்போதுள்ள காங்கிரஸ் பாராளுமன்றத்தில், காங்கிரஸ் தீவிரவாதிகளின் தொகை 100க்கு 20 விகிதம் வரையில் இருக்கிறது. எனவே இன்னுங் கொஞ்சக் காலத்திற்குள் இத்தீவிரவாதிகளே, அதிகாரத்தைக் கைப்பற்றிக் காங்கிரசை நடத்தினுல் எவரும் ஆச்சரியப்படுதற்கில்லை.

## பதிய அங்கத்தவர்கள்

பண்டிதர் ஜவஹர்லால்நேரு காங்கிரஸ் காரிய நிர்வாக சபையினராகப் பின்வருவோரை நியமித்திருக்கிருர்:- மௌலானு அஸாத்; ஸ்ரீ வல்லபாய் படேல்; பாபு ராஜேந்திர பிரஸாத்; கான் அப்துல்கபார்கான்; ஸ்ரீ சி. இராஜகோபாலாச்சாரியார்; பண்டிதர் கோவிந்த வல்லபபந்த்; மிஸ்ரர் ருபி அகமத் கித்வாய்; ஸ்ரீமதி மிருதுளா சாராபாய்; டக்ரர் B. G. கெஸ்கார்; ஸ்ரீமதி கமலாதேவி சடோபாத்யாய; ருவ்சாகிப் பட்டவர்த்தனர்; சர்தார் பிரதாபசிங்; ஸ்ரீஜுத். சுரேஷ் சந்திர பனர்ஜி, ஸ்ரீ ஜுத். சரத்சந்திரபோஸ், மிஸ்ரர் பக்ருதீன் அகமத். இவர்களில் ஸ்ரீமதி மிருதுளாசாராபாயும், டக்ரர் கெஸ்காரும் பொதுக் காரியதரிசிகளாக விருப்பர். சர்தார் வல்லபாய் படேல் முன்போலத் தனதிகாரியாக விருப்பர். இப்போது நியமிக்கப்பட்டுள்ளவர்களில் மூன்றில் ஒருபங்கினர் அதிதீவிரவாதிகளாவர் இதுகாறும் காரிய நிர்வாகசபையில் ஸ்ரீமதி சரோஜினியே ஓர் பெண் பிரதிநிதியாகவிருந்தார். இப்போது இருவரை நேரு நியமித்திருக்கிருர். இதுகாறுங் காரியநிர்வாகசபை அங்கத்தவராகவிருந்த ஸ்ரீ பட்டாபி சீதாராமையா, ஆச்சாரிய கிருபாலினி, சங்கரராவ்தேவ் என்பவர்கள் இப்போது காரியச்சபையில் இல்லாவிட்டாலும், அதன் கூட்டம் ஒவ்வொன்றுக்கும் அவர்கள் அழைக்கப்பட்டு அவர்களின் ஆலோசனையும் கேட்கப்படும் என பண்டிதர் நேரு தெரிவித்திருக்கிருர்.

## அரசியல் நிர்மாணசபைத் தேர்தல்

அரசியல் நிர்மாண சபைக்கான தேர்தல்கள் யாவும் ஜுலை மாத முடிவில், முடிவடைந்துவிடும் என இப்போது எதிர்பார்க்கப் படுகிறது அநேகமாக ஜுலை மாதம் 22ம் திகதியுடன் இத்தேர்தல்கள் முடிந்துவிடலாம்.

## இந்தியக் குடியரசு

"நாங்கள் வெகுகாலமாக இந்திய சுதந்திரத்தைப்பற்றிப் பேசிக்கொண்டுவருகிறோம், ஆனுல், இந்தச் சுதந்திரம் எப்படிப்பட்டது என்னும்விஷயத்திற் பலவிதமான அபிப்பிராய பேதங்கள் கிளம்புகின்றன. இந்தியாவின் சுதந்திர விஷயமாக இராஜப் பிரதிநிதியும் முஸ்லிம் லீக்கும் பேசுகிருர்கள்தான். ஆனுல் முஸ்லிம் லீக்கும் பிரிட்டிஷாருங்கருதும் சுயராச்சியத்துக்கும், காங்கிரஸ் கருதும் சுயராச்சியத்துக்கு மிடையே எவ்வளவோ வித்தியாசங்கள் உள்ளன. அந்நியருடைய ஆட்சியும் செல்வக்கும் எம்நாட்டில் துளியளவுதானும் இருக்க முடியாது. இங்கிலாந்தின் தொடர்பை நீக்கத்தானும் எமக்கு அதிகாரம் இருக்கவேண்டும். நாங்கள் இந்தியாவிலே ஓர் குடியரசை ஸ்தாபிக்கவேண்டும். இதுதான் நாம் கோரும் சுயராஜ்யம்" என்ற பண்டிதர் ஜவ[illegible] காங்கிரஸ் பாராளுமன்[illegible]

# உலகம்பலவிதக் கதை

2-ம் பக்கத் தொடர்ச்சி

என்ருள்: அம்மா, ஐயா என்னசெய்கிருர்கள் என்று நான் கேட்க, அவர்கள் நித்திரையாகி இரண்டாஞ் சாமமாய்விடும் அம்மா என்று பதில் சொன்னுள் இலட்சுமி; "உங்கள் எஜமானருக்கு என்ன முயற்சி? கோயிற் பூசையா? உத்தியோகமா? என்று கேட்டேன்: "கோயிற் பூசையுமில்லையம்மா; உத்தியோகமுமில்லையம்மா; அவருடைய முயற்சி அவ்வளவு கௌரவமானதல்ல; அவைகளைப் பற்றி உங்களுக்கு நான் ஏதுஞ் சொன்னேனென எஜமானன் எஜமாட்டி அறியநேர்ந்தாற் பழியம்மா" என்று பயத்தோடு சொன்னுள்: இலட்சுமி, நீ பயப்படாதே நான் உயிர் போனலும் ஒன்றையும் வெளியிடமாட்டேன்: நீ பயப்படாமற் சொல்லு என்று கேட்டேன்; "அம்மா, நீங்கள் எந்தக் குலத்திற் பிறந்தாலும் நான் உங்களை என் உடன்பிறப்பென்று மதித்துத்தான் சொல்லுகிறேன்; உங்களைக் கண்ட நேரந்தொட்டு உங்கள் விஷயமாகக் கவலைப்படுகிறேன்; இந்த ஐயர் பிராமண குலத்திற் பிறந்தும் தங்குலத்திற்குச்சிறிதும் அடாத செயல் செய்கிருர்; அதனுற்ருன் உங்களுக்குச் சொல்லக் கூசினேன்: இவர் இந்த ஊரிலுள்ள ஒரு தாசி வீட்டில் ஈடுபட்டு அவர்களுடைய உதவியாற் பொருளீட்டிச் சீவிக்கிருர் இவரைக் 'கும்பகோணத்தையர்' என்று சொன்ருற் பிழையாகாது: இவருக்கு அந்த நாளில் வைப்பாட்டியாக விருந்தவளாகிய கமலமென்ற ஒரு தாசிக் கிழவியிருக்கிருள்; இந்த ஐயர் யாருமற்ற அநாதச் சிறுமிகளை ஏமாற்றித் தம்வீட்டிற்குக் கொண்டு வந்து பின்னர் அந்தத் தாசிவீட்டிற் கொண்டுபோய்ச் சேர்த்துவிட, அங்குள்ளவர்கள அப்படியான பெண்களுக்குச் சங்கீதம் பரதநாட்டியம் பயிற்றிப் பின்பு தங்களுக்குப் பணந்தேட அந்தப்பெண்களைக் கருவியாக வைத்துக்கொள்ளுவார்கள்: உங்களைக் கூட்டிக்கொண்டுவந்த மற்றப் பெண்ணிருக்கிருளே, அவளும் அப்படிப்பட்ட ஒரு தாசிப் பெண்தான்; அவள் இளம் வயசிலேயே புருஷனையிழந்த மொட்டைப் பார்ப்பாத்தியாக இங்கே வந்தவள் அவள் வந்து சிலகாலம் அந்த வீட்டிற்ருனேயிருந்து மயிர் வளர்த்துச் சங்கீதம் பரதநாட்டியமென்னுமிவைகளைப் படித்து, இப்பொழுது சாதிமத பேதம் பாராத தாசியாய்க் காலம் போக்குகிருள்; இதுமாத்திரமல்ல அம்மா, இன்னமுஞ் சொல்லுகிறேன் கேளுங்கள்; நான் சிறுவயசிலே தாய் தகப்பன் தமரற்ற அநாதப் பெண்ணுனேன்: நாங்கள் சாதியிலே வேளாளர்; ஒரு செட்டியார் வீட்டிற் பணிப்பெண்ணுகப் போய்ச் சேர்ந்தேன்; அப்பொழுது என்வயசு ஏழு எட்டுவரையிலிருக்கும்; அந்தச்செட்டியார் நல்லவர்; ஆனுல், அவருடைய வீட்டுக்காரி மிகவும் பொல்லாதவள்; இரக்கமின்றி நான் செய்யவியலாத வேலைகளையெல்லாம் என் தலையிற் சுமத்திவிடுவாள்; நான் இளைத்துஇளைத்து ஒருவாறு செய்துமுடித்தாலும் அந்த அம்மாள் நன்மையுஞ் சொல்லாள், வயிறாரச் சோறுந் தரமாட்டாள்; அவள்செய்த கொடுமைசகிக்க முடியாமல், நான் ஒருநாள் இரவு அச்செட்டியார் வீட்டை விட்டுச் சொல்லாமற் புறப்பட்டு வரும்போது அந்த ஐயரிடம் அகப்பட்டேன்; ஐயர் என வாயினுல் என் விருத்தாந்தம் முழுவதையுங் கேட்டறிந்து கொண்டு, இதம் பேசி நயவஞ்சகமாகத் தம்முடைய இந்த வீட்டிற் கொண்டுவந்து சேர்த்தார். அவர்கள் [illegible] வருமற் செய்து [illegible]; இந்த அம்மாள் எனக்கு அன்புடன் அன்னமிட்டாள்: தனக்குப் பிள்ளைப் பேறில்லாமையினுல் இந்த அம்மாள் என்னைத் தன் பிள்ளைபோற் பாவித்து ஆதரவாய் நடத்தி வருகிருள்' இப்படியிருக்க, ஐயர் தம்மனத்தில் ஏதோ நினைத்துக் கொண்டுபோலும், எனக்குச் சங்கீதமும் பரதநாட்டியமும் பயிற்றவேண்டுமென்று ஒரு சங்கீத வித்துவானையும் நட்டுவனரையும் தாசி வீட்டிலிருந்து கூப்பிட்டு ஒழுங்கு செய்தார். எனக்கும் சங்கீதத்திற்கும் பரதநாட்டியத்திற்கும் வெகுதூரமென்பதை ஐயர் அறியார்; நட்டுவனரும் சங்கீத உபாத்தியாயரும் இரண்டுமாசகாலம் எனக்கு அவைகளைப் பயிற்ற முயன்றும் தங்கள் முயற்சி எள்ளளவும் என் விஷயத்திற் பயன்படாமை கண்டு, இந்தப் பெண்ணுக்குச் சங்கீதம் பரதநாட்டியம் பழக்குவதைக் காட்டிலும் கல்லிலே நார் உரிப்பதும் மணலிலே கயிறு திரிப்பதும் இலகுவாகுமென்று ஐயருக்குச் சொல்லிவிட்டுப் போய்விட்டார்கள்; அதனுற்ருன் தாசிவீட்டிற் போய்ச்சேராமல் இங்கேயிருக்கிறேன் அம்மா" என்று சொல்லிமுடித்தாள்; இவைகளையெல்லாம் கேட்டபோது என் மனம் பட்டபாட்டை அந்த ஈசனொருவனேயல்லாமல் வேறுயார் அறிவார்; "பிச்சை வேண்டாம் தாயே, நாயைப் பிடி" என்ற யாசகன்போல், கல்யாணஞ்செய்ய வந்தது போதும், இந்த வீட்டைவிட்டுத் தப்பிப் போவதெப்படியென்று யோசித்தேன். (வரும்)

தமிழ் அன்பர்களுக்கு ஓர் அரிய சந்தர்ப்பம்

நூலகம் புத்தகசாலை

சோல் ஏஜண்டுகள்:

ரமணுஸ்ரமப் பிரசுரங்கள், மதுரை சுவாமிநாதன பிரசுரங்கள், பேராசிரியர் சோமசுந்தரபாரதியார் பிரசுரங்கள், பாரதி பிரேஸ் பிரசுரங்கள்.

எங்களிடம் சகல தமிழ்ப் பாட புத்தகங்களும் ஏனைய உயர்தர நூல்களும் குறைந்த விலைக்குக் கிடைக்கும். ஆங்கில தமிழ்ப் பரீட்சைக்குரிய சகல பாடபுத்தகங்களையும் வாங்க விரும்புவோர் நேரிற் பெற்றுக்கொள்ளலாம் அல்லது கீழ்க் கண்ட விலாசத்துக்கு எழுதவும்

நூலகம் புத்தகசாலை,
19, மைவின் ஸ்ரீற்,
கொம்பனித்தெரு, கொழும்பு

Mis 109 16—19-7

## பிரசவம்

முருங்கனில் D. M. O. ஆகவிருக்கும் டக்ரர் V சங்கரப்பிள்ளை அவர்களின் மனைவி ஸ்ரீமதி தங்கராணி, மானிப்பாயில் உள்ள "ஸ்ரீ ராமமந்திரம்" என்னும் தமதில்லத்தில் ஓர் பெண்மகவு 10-7-46ல் பிரசவித்திருக்கிருர்.

Mis 111 12-7-46

## இலங்கை வரவு செலவுத் திட்டம்

இலங்கையின் 1946—1947 வரவு செலவுத் திட்டம் வருகிற 18-ந் திகதி அரசாங்கசபை முதல்வர் டி எஸ். சேனநாயக்காவினுல் அரசாங்கசபையிற் சமர்ப்பிக்கப்படும்.

## அகில இலங்கையிலும் ஆசிரியர் தினம்

ஏற்கெனவே அறிவித்திருந்தபடி, சென்ற 10-7-46ல் அகில இலங்கையிலும் ஆசிரியர் தினம் மிகவும் கட்டுப்பாடுடன் நடாத்தப்பெற்றது.

## தானவரவு

மலாய்நாட்டில் உத்தியோகம் வகித்தவரான உடுப்பிட்டி ஸ்ரீ M. காங்கேசு அவர்களின் பிரியபத்தினி சேதுப்பிள்ளை சென்ற 12 5-46ல் தேகவியோகமெய்தினர். அவரின் அபரக்கிரியை 1-7-46ல் நிகழ்ந்தது. அப்போது யாழ்ப்பாணம் சைவபரிபாலனசபைக்குத் தானமாக வரித்தனுப்பப்பட்ட ரூபா 2 பெற்ருேம்.

மனேஜர்.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

## கண்கவர் காட்சி! காணிவல் மாட்சி!

இந்த இலங்கையில் எத்தனேயோ காணிவற்காட்சிகளும் பொருட்காட்சிகளும் நடந்துவிட்டன
எதுவும் இக்காட்சியை வென்றதுமில்லை; வெல்லப் போவதும் இல்லை!

அத்தகை யற்புத வித்தகக் காட்சி!

பூவுலகில் இந்திரலோகம் தான் வந்ததோ என ஐயுறத்தக்க
கோடிசூரியப் பிரகாச நகரத்தைக் கண்டுகளிக்க வாருங்கள்!

## யாழ்ப்பாணம் இந்துக்கல்லூரி மைதானத்தில்

பாலர்க்கேற்ற பலவகை ஆட்டங்கள்! விருத்தர் மகிழும் விதவித வைபவம்!
ஆடவருவக்கும் ஆனந்தக்காட்சிகள்! மங்கையர்விரும்பும் மனோகரப் பொருள்கள்!

பொருட்காட்சிகள் ஒன்ரு? இரண்டா?

அரசாங்கத்தார், வர்த்தகர், விவசாயிகள் எல்லோரும் போட்டியிடும் பொருட்காட்சிகள்

எது எது வேண்டுமோ அது அதைக்காண அரிய சந்தர்ப்பம்

நவரசந்ததும்பும் நாடகக்காட்சிகள்! சங்கீதவாணரின் தனிப்பெரும் விருந்து!
சர்க்கஸ் ஆட்டங்கள்! பரதநாட்டியம்! பலவகை இந்திய - இலங்கை நடனங்கள்!

ஆசிரியர்களே! நீங்கள் உங்கள் மாணவர்களுக்குக் கிரியை முறையிற் போதிக்க, ஓர் அரிய சந்தர்ப்பம்! கலை, சாஸ்திரம், சித்திரம், விஞ்ஞானம் சம்பந்தப்பட்ட அநேக காட்சிகள் இங்கு நிகழும், அவற்றுக்கு உங்கள் மாணவர்களைக் கொண்டுவந்து காட்டுங்கள்!


## ஜூலை மாதம் 5ௗ தொடக்கம் 15ௗ முடிய நடைபெறும்

பாரதநாட்டின் சங்கீதப் பொக்கிஷம், மதுரகீதவாணி
**என். ஸி. வஸந்தகோகிலத்தின்**
அமிர்தகானத்தை நீங்கள் கேட்கவேண்டாமா?
**அது எப்போது? திகதியை எதிர்பாருங்கள்**

நமது தமிழ்ப் பெருமக்களின் தனிப்பெரும் ஸ்தாபனங்கள் யாழ்ப்பாணம் இந்துக்கல்லூரியும், இந்துமகளிர் கல்லூரியும். இந்தப் பொருட்காட்சி, "காணிவ"லிற் சேரும் பணம் முழுவதும் இந்த ஸ்தாபனங்களுக்கேயாதும், எனவே. சைவம் தழைக்க, தமிழ்ஓங்க, எம்நாடு முன்னேற வந்து உதவுங்கள்! உதவுங்கள்!

(Mis 100 2—15)






எங்கும் கியாதிபெற்ற எமது

ரேடியோ பீடிகளையே


எப்பொழுதும் உபயோகித்து ஆனந்தம் அடையுங்கள்.

இலங்கையிற் பிரதம விநியோகஸ்தர்:
எல்லாஊர்களிலும் கிடைக்கும்.
மொடேண் ஏஜென்சீஸ்,
சிலாபம், இலங்கை.

(Mis 185, 31—31-12-46.)



மிகச் சிறந்த புதிய **ஆர்மோனியங்கள்**



விலைக்கிருக்கின்றன
**எந்த சீதோஷ்ண காலத்திலும் பாவிக்கலாம்**
சங்கீதக் கருவிகள் உத்தரவாதத்துடன் பழுதுபார்த்துக் கொடுக்கப்படும்
**கல்கத்தா மோகன புலூட் ஆர்மோனியக் கொம்பனி,**
484 K K S ரோட், சிவலிங்கப்புளியடி, யாழ்ப்பாணம்.
(Mis 98 28 6—28-9) (வெ)



## பசந்த லேகியம்

இதனால் மூலச்சூடு, இருமல் பித்தப் பாண்டு, குன்மவாய்வு, நெஞ்செரிவு, கை கால் வலி, அசதி, அஜீரணம், வயிற்றுப் பொருமல், புளித்த ஏப்பம், மலச் சிக்கல், பீனிசம், பார்வைக் குறைவு, வெள்ளை, சூலை, சந்து வாய்வு, பிரமேகம் முதலிய வியாதிகள் சூரியனைக் கண்ட பனிபோல் நீங்கும், இந்திரியம் கட்டுப்பட்டு, தேக புஷ்டி, வஜீகரம், பலம் முதலானவை உண்டாகும்.

ஸ்திரீகளுக்குண்டாகும் பிரதானமான வியாதியாகிய சூதகக்கட்டு, பிரசவத்தால் உண்டாகும் பல கொடிய உபத்திரவங்கள் தீர்ந்து மாதவிடாய் குறைந்து அல்லது அதிகமாய்க்காணுதலால்நேரிடும் பல நோய்களும் தீர்ந்து, தேகத்துக்குப்பலம் உண்டாக்கும்.

ஒருறாத்தல் விலை ரூபா 25
அரைறாத்தலுக்கு ரூபா 12-50
கால்றாத்தல் ரூபா 6-25

விலாசம்:
**க. ஆறுமுகம்பிள்ளை**
நி. 156, செக்கடித்தெரு கொழும்பு
(Mis 25 23-4 46 to 22-3-47)



## தந்தரோகசஞ்சீவி

கந்தசாமி வைத்தியர்

**சந்தனுதித் தயிலம்**

ஒரு கிழமைக்கு வைக்கக்கூடிய
ஒரு அவுன்சு தயிலம் விலை ரூ. 2

ஒவ்வொருநாளும் ஒருசதவீதம் வைத்துக் கடைசியன்று சீயாக்காய் வெந்தயம் அவித்துத் தப்பி வென்னீரில் தோய்வது. பத்தியம்: புகையிலையாகாது ஆடினபல்லு உடனே இறுகும், முரசு வளரும், வாய்ப் புண் வீக்கம் தொண்டைப்புண் கம்மல் இருமல் கபாலம் பீனிசம் மாற்றும் உத்தரவாதமுடையது. ஒரு தடவை வேண்டிப் பாவித்து அறியலாம்.

நெருப்புச்சூடு முதல் எந்த வேக்காட்டிற்கும் பூச உடனே வேதனை தணியும்.

வீ. பீ. பீ. யிலும் அனுப்புவோம்.
சீசா மூலிய செலவு வேறு.

விலாசம்:
ஆயுள்வேத சிவசோதி
மெடிக்கல் ஹோல்
வல்வெட்டித்துறை.

வல்வை நரசிங்க வைரவாலயத்திலும் பெற்றுக்கொள்ளலாம்.

Mis 27 26-4-46—25-10-46


வான்முகில் வழாதுபெய்க மலிவளஞ் சுரக்க மன்னன்
கோன்முறை யரசுசெய்க குறைவிலா துயிர்கள் வாழ்க
நான்மறை யறங்களோங்க நற்றவம் வேள்வி மல்க
மேன்மைகொள் சைவநீதி விளங்குக வுலக மெல்லாம்.

Printed and Published by PANDIT V. T. SAMBANDHAN, residing at Vannarponnai West Jaffna, for and on behalf of the Proprietors, the Saiva Paripalana Sabha, Jaffna, at their Press, the Saiva Prakasa Press Vannarponnai, Jaffna, on Friday July, 12, 1946.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org